
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் கிறிஸ்தவ சபை அல் அயின்

மன்னா.

பொழிவு : 18 | SEPTEMBER 2026 | ஆகாரம் : 09



நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு
இவைகளின்படி செய்கிறவன் எவனோ,
அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின
புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.

மத்தேயு 7:24.

UPCOMING EVENTS

All Sun Sep '26

5:00 pm

OUT REACH MINISTRY - CAMP

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Sunday

05 Sep '26

10:30am

FASTING PRAYER

Parsonage - C.S.I. Tamil Parish Alain

Saturday

12 26 Aug '26

7:30pm - 09:30pm

EVENING CHURCH SERVICE

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

05 19 Sep '26

7:30pm - 09:30pm

HOLY COMMUNION SERVICE

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

All Wed Sep '26

7:30 pm

BIBLE STUDY & PRAYER

Parsonage - C.S.I. Tamil Parish Alain

Wednesday

26 Sep '26

9:30 pm

BIBLE QUIZ

EZEKIEL 1-30

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

12 Sep '26

7:30pm - 09:30pm

CHAMPION FOR CHRIST

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

Saturday

30 Sep '26

11:30 pm

MONTH END SERVICE

Parsonage - C.S.I. Tamil Parish Alain

Sunday

ஆயர் மடல்

"அறிவும், நெறியும்
கிறிஸ்துவில் வாழ்க்கை"

From the Pastor's Desk



அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.

தென்னிந்தியத் திருச்சபையில் ஆண்டுதோறும் செப்டம்பர் மாத முதல் ஞாயிற்றுக்கிழமையை கல்வி ஞாயிறாக கடைப்பிடித்து வருகிறது. காரணம் செப்டம்பர் 5 ஆம் தேதியை இந்திய நாடு முழுவதும் ஆசிரியர் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

அதற்கான காரணம் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவரான டாக்டர்.சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 5 ஆகும். அவர்கள் தமிழ்நாட்டில் திருத்தணி அருகே உள்ள சர்வபள்ளி என்றும் ஒரு சிறிய கிராமத்தில் 1888 ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் தேதி எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவர் தமது வாழ்வில் கடின உழைப்பின் வழியாக ஆசிரியராகி தமது பணியைத் தொடங்கி குடியரசுத் தலைவராக உயர்ந்த நிலையும் அவர் சிறந்து விளங்கினார்.

அவர் பிறந்த நாளான செப்டம்பர் 5 ஐ இந்திய நாடு முழுமையிலும் ஆசிரியர் தினமாக கடைப்பிடித்து, அவரை மதிக்கின்றது. அதற்கான காரணம் அவர் இந்தியாவிற்கு செய்த சேவைகள் ஏராளம். Dr. சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் ஆசிரியப் பணி அளப்பரியது. ஒரு தனிமனிதரின் கல்வியும், தத்துவமும் நாடே போற்றுகின்றது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கம் என்பது உலகத் தலைவர்கள் அநேகரை கவர்ந்தது, மீட்புக்கான வழியைக் கொடுத்துள்ளது. அந்த மலைப் பிரசங்கம் மத்தேயு நற்செய்தி நூல் ஐந்தாம் அதிகாரம் தொடங்கி ஏழாம் அதிகாரம் வரையிலும் மிகச்சிறந்த அருளுரையாக அமைந்துள்ளது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து உலகத்திரை அனைவருக்குமானச் செய்தியை வழங்கியுள்ளதை நாம் திருமறையில் படிக்கிறோம். அவற்றுள் சில,

- **பேறுபெற்றோர் (பாக்கியவான்கள்)** (மத்தேயு 5:3-12)
  நீங்கள் உலகில் பாக்கியவான்களாக கடவுளால் ஆசீர்வதிக்கப்பட இவைகளை எல்லாம் செய்யுங்கள் என்று கற்பித்தார்.
- **உப்பும், ஒளியும்** (மத்தேயு 5:13-16)
  நீங்கள் பூமிக்கு உப்பாக, உலகிற்கு ஒளியாக இருக்க வேண்டும் என்று கற்பித்தார்.
- **பகைவரிடத்திலும் அன்பாயிருங்கள்** (மத்தேயு 5:43-47)
  என்று கற்பித்தார்.



Teach
Serve
Transform

A LIFE OF FAITH
A BRIGHTER TOMORROW

கடவுளைப் பற்றிம் கொண்டு வாழ்கின்றீர்களா? அல்லது உலகைப் பற்றிட கொண்டு வாழ்கின்றீர்களா? என்றக் கேள்வியை எழுப்பி கற்பித்தார் (மத்தேயு 6:24).

கவலைக் கொள்ளாதிருங்கள், கவலைப்படுவதினால் நீங்கள் ஒன்றையும் உங்களால் செய்ய இயலாது என்பதை தெளிவுபடுத்தினார் (மத்தேயு 6:25-34).

உங்கள் சொல்லும், செயலும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போல் இணைந்திருத்தல் வேண்டும் என்றும் கற்பித்தார்.

நீங்கள் சொல்லுகின்ற வார்த்தையும், செய்கின்ற செயலும் சரியாக இருத்தல் வேண்டும் என்பதை தெளிவுபடுத்தினார் (மத்தேயு 7:21-13).

மலை பிரசங்கத்தின் முத்தாய்ப்பாக இருவகை அடித்தளங்களை நம்முன் வைத்து, ஆண்டவர் இயேசு முடிக்கின்றார், முதலாவது புத்தியுள்ள மனுஷன், மேற்கண்ட அருளுரையமயக் கேட்டு எந்த மனிதன் அதைக் கடைப்பிடித்து வாழ்கிறானோ அவனே புத்தியுள்ள மனுஷன் என்றும், அவன் தனது வீட்டை பாறையின் மீது கட்டிள மனிதனுக்கு ஒப்பிடப்படுவான் என்றும் (மத்தேயு 7:24)-ஆம், மேற்கண்ட வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செய்யாதவன் எவனோ, அவன் புத்தியற்ற மனிதனாக தன் வீட்டை மணலின் மீது கட்டிள மனிதனுக்கு ஒப்பிடப்படுவான் (மத்தேயு 7:26) என்றும் ஆண்டவர் இயேசு தமது மலைப் பிரசங்கத்தை முடிக்கின்றார்.

அன்பிற்கினியவர்களே, இந்த செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் கல்வி ஞாயிற்றை கடைப்பிடிக்கிற, ஆசிரியர் தினத்தை கொண்டாடுகிற நாம் நமக்கு ஆசானாய் இருக்கிற ஆண்டவர் இயேசு கற்பித்துள்ள இந்த அன்பின் போதனைகளை நாமும் கடைப்பிடித்து வாழ்வோமானால் புத்தியுள்ள மனிதர்களாக, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவோம்.


சிந்திப்போம், செயல்படுவோம் ஆண்டவர் தாமே நம்மை வழி நடத்திக்காப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

"A firm foundation for a brighter tomorrow"

MATTHEW 7:24



இன்பமானவள் நகோமி

இடர்களிலும் இறைவன் நடத்தும் இன்பப் பாதை



"என் ஜனத்தை நடத்தும் தேவன் இன்றும் நம்மோடு இருக்கிறார்."

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

நமது வாழ்விலே, ஆண்-பெண்; பகல்-இரவு; பிறப்பு-இறப்பு; இளமை-முதுமை; இன்பம்-துன்பம்; வெற்றி-தோல்வி; நன்மை-தீமை; மேடு-பள்ளம்; உயர்வு-தாழ்வு; ஒற்றுமை-வேற்றுமை; தொடக்கம்-முடிவு என்று இதனைப்போன்று இரு நிலைகளைக் காணலாம். அப்படித்தான் நகோமி என்பவரின் வாழ்விலும், இன்பம் துன்பம் இவை இரண்டும் மாறி மாறி வருவதைப் பார்க்கலாம். இதளைப் பிரசங்கி குறிப்பிடும் போது, மாயை மாயை (பிர 1:2) என்றும், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் உண்டு (பிர 3:1) என்றும் குறிப்பிடுவதைக் காணலாம்.

> "ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் உண்டு."
>
> பிரசங்கி 3:1

His Timing is Beautiful

இடர்தள் இன்பமாக மாற்றும் இறைவன்...

இன்பமானவள்

நகோமி (Naomi) என்பதற்கு இன்பமானவள் அல்லது மகிழ்ச்சியானவள் என்று பொருள். இவள் எலிமெலேக்கின் மனைவி; மக்லோன், கிலியோன் என்பவர்களுக்குத் தாய் (ரூத் 1:1,2) ஆவார். அப்பத்தின் வீடு என்னப்பட்ட பெத்லெகேமில் ஏற்பட்ட பஞ்சத்தால் குடும்பத்துடன் மோவாப் சென்று, கணவனும் தன் இரு மகன்களும் மரித்ததால் மோவாபிய மருமகள்களில் ரூத்துடன் பெத்லெகேம் வந்தவர். நகோமியின் தொடக்க கால வாழ்வு அவரது பெயருக்கு ஏற்றபடி இன்பமானதாகவும், மகிழ்ச்சியாகவும் தான் இருந்துள்ளது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தினால் அவர்களது வாழ்வு மாறிப்போனது.

கசப்பு

மாராள் என்பதற்கு கசப்பு அல்லது துன்பம் என்று பொருள். நகோமி தாமாகவே சொல்லுகிறார், இனி என்னை நகோமி என்று சொல்வாமல் மாராள் என்று சொல்லுங்கள். ஏனெனில் சர்வவல்லவர் என் வாழ்வில் கசப்பை கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவராய் போனேன், ஆனால் என் வாழ்வு வெறுமையானது. என் வாழ்வின் மகிழ்ச்சி துன்பமானது என்று (ரூத் 1:20,21) கூறுகிறார்.

இஸ்ரவேலரின் கானான் நோக்கிய வனாந்தரப் பிரயாணத்தில், கசப்பு நீரால் இஸ்ரவேலர் மாராவிலே முறுமுறுத்தனர். முறுமுறுத்த போது, கர்த்தரின் வார்த்தைப்படி மோசே மரத்தை வெட்டி நீரில் போட்டதும் அத்தன்ணீர் மதுரமாயிற்று (யாத் 15:23-25).

பிரியமானவர்களே, நமது வாழ்விலும் கசந்து போன கசப்பான துன்பம் நிறைந்த வேளையிலே, கர்த்தரையே நோக்கி பார்ப்போம். துன்பம் நீங்கி மகிழ்வு உண்டாகவும், கசப்பு மறைந்து இனிமை நிலைத்திடவும் ஆண்டவர் கிருபைச் செய்வார்.

நிறைவாக நகோமியின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தையும், மகிழ்வையும் ஆண்டவர் கட்டளையிட்டார். ரூத்-போவாசை மணந்து ஒபேதைப் பெற்றாள். ஒபேத் தாவீதின் தந்தை ஈசாயைப் பெற்றார் (ரூத் 4:17). நகோமியின் கசப்பான நிலை மாறி மீண்டும் மகிழ்வான வாழ்வை பெற்றார் (ரூத் 4:16).

இஸ்ரவேலரின் பிரயாணத்தில் பலவிதமான கடினமானச் சூழல்களைக் கர்த்தரேக் கடக்கச் செய்து, பாலும் தேனும் ஓடுகிற கானான் நாட்டிலே கொண்டு போய் சேர்த்தார்.

நேற்றும் இன்றும் என்றும் மாறாத ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை இறுகப்பற்றிப் பிடித்து வாழ்வோம். நமது வாழ்விலும் துன்பமான சூழல்கள் மாறி, இன்பமான வாழ்வை மலரச் செய்து, நம்மை மகிழ்விப்பார், ஆசீர்வதிப்பார்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

Mrs.P.Velanganni.

"கசப்பு மறைந்து இனிமை நிலைக்கும்"



Hope Restores Every Bitter Story

அவர் எல்லாவற்றையும் நல்லதாக்குகிறார்...
ரோமர் 8:28

செயலர் மடல்

நம்மை ஒவ்வொரு நாளும் வழிநடத்தி, தமது கிருபையினால் காத்து வருகின்ற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், உங்கள் அனைவரையும் அன்போடும் மகிழ்ச்சியோடும் வாழ்த்துகிறேன்.

விடுமுறையை முன்னிட்டு தாயகம் சென்ற நம் அன்புக்குரிய அனைவரையும், தமது கரத்தினால் பாதுகாத்து, பத்திரமாக மீண்டும் நம்மிடையே கொண்டு வந்த ஆண்டவருக்கு நன்றிகளைச் செலுத்துவோம். கர்த்தருக்குச் சித்தமானால், நமது ஆலயத்தின் சிறுவர் வேதாகமப் பள்ளி கோடை விடுமுறைக்குப் பின்னர், 05.09.2026 அன்று மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனைத் தொடர்ந்து, "CHAMP FOR CHRIST" போட்டிகள் 12.09.2026 அன்று நடைபெறவுள்ளன. எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இந்நிகழ்வுகளுக்காக ஆயத்தப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வரும் அக்டோபர் 24ஆம் தேதி நடைபெறவுள்ள அறுவடைப் பண்டிகைக்கான ஆயத்தப் பணிகளில், சபையார் அனைவரும் அளித்து வரும் ஒத்துழைப்பிற்காக என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ந்து நடைபெறவுள்ள அனைத்து நிகழ்வுகளிலும் உங்கள் அனைவரின் அன்பான பங்களிப்பையும், முழுமையான ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன்.

நமது திருச்சபையின் அனைத்து ஊழியங்களிலும் சபையார் அனைவரும் ஜெபத்துடனும் ஆர்வத்துடனும் பங்கேற்று, தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பரிபூரணமாகப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறேன்.

தேவனுடைய கிருபையும் ஆசீர்வாதங்களும் உங்கள் வாழ்வில் நாளுக்கு நாள் பெருகுவதாக!

கடந்த மாதங்களில் நமது திருச்சபை குடும்பங்களில் பிறந்த குழந்தைகள்:	
26 ஆகஸ்ட் 2026	திரு. லிஃபின் ராஜ் மற்றும் திருமதி. அஷ்மிதா லிஃபின் ராஜ் தம்பதியினருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

இறைப் பணியில்

MR. BELFER JOHN SIGAMONI

திருச்சபைச் செயலர்

மன்னா ஆகஸ்ட்-26 மீள் பார்வை



ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு மகிமை. ஆகஸ்ட் மாத மன்னாவைக் குறித்த ஒரு மீள் பார்வை, பக்-3, ஆயர் மடலில், நம்மை மீட்டெடுக்க புறக்-கணிக்கப்பட்ட, வெறுக்கப்பட்ட ஆண்டவர் இயேசுவைப் பற்றிக் கொள்வோம் என்றும், பக்-4ல், விசுவாசப் பெண்ணான ரூத்தின் மெய்யான அன்பு, நிறைவாழ்வைத் தந்தது என்றும், பக்-5, செயலர் மடலில்,நமது விடுதலை வாழ்வு மற்றும் திருச்சபையின் நிகழ்வுகளைக் குறித்தும், பக்-6 ல், காலங்களை சரியாகப் பயன்படுத்தி ஆண்டவருக்கேற்ற வாழ்வு வாழ்வோம் என்றும், பக்- 7 ல்,கடவுளுடைய சர்வாயுத வர்க்கங்களான சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், இரட்சண்யம், தேவவசனம், ஜெபம் இவற்றை அணிந்து செயல்படுவோம் என்றும், பக்- 8 ல், ஏனோக்கைப் போல கடவுளோடு நேரம் செலவிடுகிற மக்களாக வாழ வேண்டும் என்றும், பக்-9 ல், திருமறை வினா-விடைகள் மற்றும் விடைகள் எழுதியுள்ளோர், தொடர்ந்து சிறுபிள்ளைகளின் கைவண்ணங்கள், சிறுபிள்ளைகளுக்கான புதிர்கள் மற்றும் ARTICLE எழுதின அனைவருக்கும் பாராட்டுக்கள். கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,
ஆயர்.

மேலானவைகளையே நாடுங்கள்

> “பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.”
> – கொலோசெயர் 3:2

அப்போஸ்தலனாகிய பவுல் மிகத் தெளிவாக ஒரு தேவ ஆலோசனையை நமக்குத் தருகிறார்.

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

நமது முழுமையான கவனமும், விருப்பமும், தேடலும் பரலோகத்திற்கு அடுத்த காரியங்களாகவே இருக்க வேண்டும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது மலைப்பிரசங்கத்தில்,

> *“பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கண்ணமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள். உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்”*

என்று போதிக்கிறார்.

நாம் பூமியில் சேர்க்கும் பணம், பொருள், ஆடம்பரங்கள் எல்லாமே ஒரு நாள் அழிந்துபோகும் அல்லது நம்மை விட்டுப் போய்விடும். ஆனால் பரலோகத்தில் நாம் சேர்க்கும் பொக்கிஷங்கள் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

இருதயம் எதை நேசிக்கிறது? அழியும் உலகப் பொருட்களையா? அல்லது அழியாத பரலோகத்தையா?

நாம் பரலோகத்திற்கு அடுத்தவைகளையே நாடக்கூடியவர்களாக இருக்க வேண்டும். பூமியில் உள்ளவைகளைத் தேட ஆரம்பித்தால், பரலோகத்தின் ஆசீர்வாதங்களை நாம் இழந்துவிடுவோம்.

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமையாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல; அவைகள் உலகத்தினால் உண்டானவைகள் என்று வேதம் சொல்கிறது.

“நம்முடைய கண்ணோக்கு பரலோகத்தில் இருக்கட்டும்”

A HIGHER PURPOSE A BRIGHTER ETERNITY



நமது பாவங்கள் மற்றும் வீழ்ச்சிகளுக்குக் காரணமானவை மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை.

மாம்சத்தின் இச்சை என்பது சரீர சுகங்களுக்காகவும், ஆசைகளுக்காகவும் ஏல்லைமீறிச் செல்வது.

கண்களின் இச்சை என்பது, பார்ப்பதை எல்லாம் அடைய வேண்டும் என்ற பேராசை. மற்றவர்களைப் பார்த்து ஒப்பிட்டு நமக்கும் அது வேண்டும் என்று அலைவது.

ஜீவனத்தின் பெருமை என்பது, "நான் பெரிய வீட்டைக் கட்ட வேண்டும், விலையுயர்ந்த காரை வாங்க வேண்டும், என் வியாபாரம் பெரிதாக வேண்டும், எல்லாரும் என்னைப் பற்றி;ு பெருமையாகப் பேச வேண்டும்" என்று நினைப்பதுகூட இந்தப் பெருமையின் வெளிப்பாடுதான்.

இவை எதுவுமே தேவனிடமிருந்து வந்தவை அல்ல.

உலகமும் அதின் இச்சைகளும் ஒழிந்துபோம்; ஆனால், தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

அப்படியானால், ஒரு எளிய, ஆசீர்வதிக்கப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ நம் நோக்கத்தை மாற்றுவோம்.

நம் வாழ்க்கை எதை நோக்கிப் பயணிக்கிறது?

பூமியா? பரலோகமா?

நம் தேவன் என்ன நோக்கத்திற்காக அழைத்தாரோ, அதை நிறைவேற்றுவோம்.

"நான் எப்படியாவது ஆத்துமாக்களை இரட்சிக்க முடியுமா? யாருக்காவது தேவனைப் பற்றிச் சொல்ல முடியுமா?" என்ற தாகம் நமக்குள் வர வேண்டும்.

அழிந்துபோகும் கட்டடங்களை விட, அழியாத ஆத்துமாக்களே தேவனுக்கு விலையுயர்ந்த பொக்கிஷங்கள்.


தேவன் நமக்குக் கொடுத்த திறமைகள், தாலந்துகள், பொருளாதாரம், நம் குடும்பம் ஆகிய அனைத்தையும் தேவனுடைய ராஜ்யத்தின் மேன்மைக்காகவும், மற்றவர்களுக்குப் பிரயோஜனமாகவும் பயன்படுத்துவோம்.

இதுவே உண்மையான ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.

"பூமியா? பரலோகமா?"

SET YOUR HEART ON THINGS ABOVE.

Article by,
Mr.Rajesh Anbu
Men's Fellowship



காத்திருப்பது தோல்வி அல்ல; தேவனின் திட்டத்தின் ஒரு பகுதி

அவசரத்தை விட தேவனின் நேரம் சிறந்தது

ஒரு சிறிய கிராமத்தில் வாழ்ந்த விவசாயி ஒருவர் இருந்தார். ஒவ்வொரு ஆண்டும் விதைகளை விதைத்து, நிலத்தை உழுது, தண்ணீர் பாய்ச்சுவார். விதையை விதைத்த மறுநாளே அது முளைக்கவில்லை என்று அவர் நிலத்தைத் தோண்டிப் பார்க்கவில்லை. ஏனென்றால், விதை மண்ணுக்குள் அமைதியாக வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதை அவர் அறிந்திருந்தார். சரியான காலம் வந்தபோது அது முளைத்து, வளர்ந்து, இறுதியில் ஏராளமான கனிகளைத் தரும் என்பதை அவர் நம்பினார். இந்த விவசாயியின் பொறுமை, தேவனை நம்பி காத்திருக்கும் விசுவாசியை நமக்கு நினைவூட்டுகிறது.



நம்முடைய வாழ்க்கையிலும் இதேபோன்ற தருணங்கள் வருகின்றன. நாம் ஜெபிக்கிறோம்; ஆனால் பதில் உடனே கிடைப்பதில்லை. நாம் முயற்சி செய்கிறோம்; ஆனால் கதவுகள் திறக்கப்படுவதில்லை. அப்போது "தேவன் என் ஜெபத்தை கேட்கிறரரா?" என்ற கேள்வி நம் மனதில் எழலாம். ஆனால் வேதாகமம் நமக்கு ஒரு பெரிய உண்மையை கற்றுக்கொடுக்கிறது. "அவர் எல்லாவற்றையும் அதற்குரிய காலத்தில் அழகாகச் செய்தார்" (பிரசங்கி 3:11). தேவன் தாமதிப்பது போலத் தோன்றினாலும், அவர் செயற்படாமல் இருப்பதில்லை. நம் கண்களுக்கு தெரியாமல், நம் நன்மைக்காக அவர் வேலை செய்து கொண்டிருக்கிறார்.

ஆபிரகாமின் வாழ்க்கையை நினைத்துப் பாருங்கள். தேவன் அவருக்கு ஒரு மகளை வாக்குத்தத்தம் செய்தார், ஆனால் அந்த வாக்குத்தத்தம் நிறைவேற பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. மனிதக் கண்களுக்கு அது தாமதமாகத் தோன்றியது. ஆனால் தேவனுடைய பார்வையில் அது சரியான நேரமாக இருந்தது. இறுதியில் ஈசாக்கு பிறந்தபோது, அது மனித சக்தியால் அல்ல, தேவனுடைய வல்லமையால் நடந்தது என்பது அனைவருக்கும் தெளிவானது. தேவன் தம்முடைய மகிமை வெளிப்பட வேண்டுமென்றால், சில நேரங்களில் நம்மைக் காத்திருக்கச் செய்கிறார்.

யோசேப்பின் வாழ்க்கையும் இதையே கூறுகிறது. சிறுவயதிலேயே தேவன் அவருக்கு பெரிய கனவுகளைக் கொடுத்தார். ஆனால் அந்தக் கனவுகள் நிறைவேறுவதற்கு முன், அவர் குழியில் தள்ளப்பட்டார், அடிமையாக விற்கப்பட்டார், சிறையிலும் அடைக்கப்பட்டார். மனிதர்களின் பார்வையில் அவரது வாழ்க்கை தோல்வியாகத் தோன்றியது. ஆனால் தேவன் அவரை எகிப்தின் பிரதான அதிகாரியாக மாற்றத் தயார்படுத்திக் கொண்டிருந்தார். அரியணையில் அமர்வதற்கு முன், அவரது குணத்தையும் விசுவாசத்தையும் தேவன் உருவாக்கினார்.

> அவர் எல்லாவற்றையும் அதற்குரிய காலத்தில் அழகாகச் செய்தார்.
> — பிரசங்கி 3:11

தாவீதும் இதே அனுபவத்தைச் சந்தித்தார். சாமுவேல் அவரை ராஜாவாக அபிஷேகம் செய்த பிறகும், உடனே அவர் அரியணையில் அமரவில்லை. பல ஆண்டுகள் சவுலிடமிருந்து ஒடி மறைந்து வாழ் வேண்டியிருந்தது. இருந்தாலும், தாவீது தேவனுடைய நேரத்தை மீறி ஏதையும் செய்யவில்லை. "தேவன் ஏற்படுத்திய காலம் வரும்போது, அவர் என்னை உயர்த்துவார்" என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தார். இறுதியில் தேவன் தம்முடைய வாக்கை நிறைவேற்றினார்.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் இதே உண்மையை காண்கிறோம். அவர் தேவகுமாரனாக இருந்தபோதும், தம்முடைய ஊழியத்தைத் தொடங்குவதற்கு முன் அமைதியாக காத்திருந்தார். கானா ஊரின் கல்யாணத்தில் கூட, "என்னுடைய வேளை இன்னும் வரவில்லை" என்று கூறினார். ஒவ்வொரு செயலையும் பிதாவின் நேரத்திற்கேற்ப செய்தார். இதன் மூலம், தேவனுடைய திட்டத்தில் சரியான காலம் எவ்வளவு முக்கியமானது என்பதை நமக்குக் கற்றுக்கொடுத்தார்.


இன்று நாமும் வாழ்க்கையில் பல விஷயங்களுக்காகக் காத்திருக்கிறோம். சிலர் வேலைக்காக, சிலர் திருமணத்திற்காக, சிலர் குழந்தைப் பேறுக்காக, சிலர் குணமாகுதலுக்காக, சிலர் குடும்ப சமாதானத்திற்காக ஜெபித்து வருகிறார்கள். பதில் தாமதமாகலாம்; ஆனால் தேவன் ஒருபோதும் தவறுவதில்லை. அவர் நம்மை மறந்துவிடவில்லை. மாறாக, நம்முடைய வாழ்க்கையையும், நம் மனதையும், நம் விசுவாசத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

எனவே, காத்திருக்கும் நாட்களில் நாம் முறையிடாமல் ஜெபிப்போம். ஒப்பிடாமல் நம்பிக்கையுடன் இருப்போம். சோர்ந்து போகாமல் தேவனைப் பற்றிக்கொள்வோம். விவசாயி விதையை நம்பிக்கையுடன் விதைப்பது போல, நாமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பிக்கையுடன் பற்றிக்கொள்வோம். இன்று நாம் கண்ணீருடன் காத்திருப்பது, நாளை தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தும் சாட்சியாக மாறலாம்.

அன்பானவர்களே, தேவன் ஒருபோதும் தாமதிக்கிறவர் அல்ல. நம் கடிகாரத்தின் நேரத்தின்படி அல்ல, நம் வாழ்க்கைக்கான அவருடைய பரிபூரண திட்டத்தின்படி செயல்படுகிறார். இன்று நீங்கள் காத்திருக்கிறீர்கள் என்றால், மனம் தளர வேண்டாம். தேவன் இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் ஏற்படுத்திய காலம் வந்தவுடன், உங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையும் அழகாக செய்வார்.

அவர் எல்லாவற்றையும் அதற்குரிய காலத்தில் அழகாகச் செய்தார்.
— பிரசங்கி 3:11

Article by,
Sister.Jiji.B.T,
Women's Fellowship.



வடிவமைத்து உருவாக்கியவர்

Designed by God for a Purpose

(Designer & Creator)



"அவர் எல்லாவற்றையும் ஞாரைத்தோடு உண்டாக்கினார்" (சங்கீதம் 104:24)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

அனைவருக்கும் ஸ்தோத்திரம். நம்முடைய ஆண்டவராகிய கர்த்தர் உலகத்தில் உள்ள அனைத்தையும் வடிவமைத்து தமது வார்த்தையின் உண்டாக்கினார். ஆனால் மனிதரை மாத்திரம் தம்முடைய விருப்பப்படி தமது சாயலாக வடிவமைத்து படைத்துள்ளார். ஏனெனில், அவர் நம் மீது வைத்த அன்பு பெரிது. கர்த்தர் நம்மை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதற்கு இதுவே முதல் அடித்தளம் (ஆதி 1:26,27) ஆகும்.

கிறிஸ்துவுக்குள் படைக்கப்பட்டிருக்கிறோம்

நாம் கர்த்தரால் உருவாக்கப்பட்டிருக்கிறோம். எப் 2:10-ல் உள்ளபடி நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் படைக்கப்பட்டு, ஆண்டவரின் செய்கைவையிருக்கிறோம். நாம் அனைவரும் கர்த்தருடைய நோக்கத்தோடு படைக்கப்பட்டவர்களாய், எங்கோ பிறந்து, எந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார் சர்த்தர். எனலே, நாம் எதைத் குறித்தும் அல்லது மற்ற்வரைக் குறித்தும் நம் மனதில் எதையும் சிந்திக்காமல், நமக்கானதை ஆண்டவர் தந்திருக்கிறார் என்கிற மனநிறைலோடு அனுதினமும் கர்த்தரைத் துதிப்போமாக.

மகிமையை வெளிப்படுத்துகிறது

மனிதராகிய நம்மைப் படைத்த ஆண்டவரை நாம் துதிக்கிறோம? சங்கீதம் 19:1-ல் வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. கவனிப்போமாகில், கர்த்தர் படைத்த படைப்புகள் அனைத்தும் அவரைத் துதிக்கின்றன.

தாயின் கருவில் பாதுகாக்கிறார்

என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினார் என்று சங்கீதம் 139:13,14-ல் படிக்கிறோம். (You knitted me together in my mother's womb). தாயின் கருவில் இருக்கும் போது நம்மை எவரும் கானும் முடியாது. ஆனால் நமது ஆண்டவராகி கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் வடிவமைத்து, உருவாக்குகின்ற வல்லமையுடைய கர்த்தர் ஆவார்.

தீர்மானித்தல்

ஆண்டவராகிய கர்த்தர் நம்மை உருவாக்கினது மட்டுமல்ல, நமக்கான வாழ்வின் திட்டத்தையும் முன்குறித்து வைத்திருக்கிறார் என்பதை எரேமியா 1:5-ல் நாம் படிக்கிறோம். எரேமியா தீர்க்கதரிசியைக் குறித்து, தாயின் கருவில் உருவாகும் முன்னே அறிந்தேன். இனங்களுக்கத் தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன் என்றார். (Before I formed you in the womb, I appointed you as a prophet). நம் ஒவ்வொருவரையும் உருவாக்கின கர்த்தர், நமக்கான முழு திட்டத்தையும் ஏற்கனவே தீர்மானித்துள்ளார் என்பதை முருவதும் விசவாசிப்போம்.



"நான் உன்னை உருவாக்கினேன், நான் திட்டமிட்டிருக்கிறேன், நான் உன்னை நடத்துவேன்."

கர்த்தருடைய சித்தம்

நீரே சகலத்தையும் சிருஷ்டத்தீர், உம்முடைய சித்தத்திலாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்ப்க்கப்பட்டவைகளுமாய் இருக்கிறது (வெளி 4:11). கர்த்தர் தம்முடைய சித்தத்தின்படியே நம்மை உருவாக்கி இருக்கிறார் (எரே 29:11).


எனலே, நமக்கு முன் குறித்து வைத்திருக்கிற திட்டத்தை கர்த்தர் தாமே நிறைவேற்றுவார். நம் ஒவ்ஒருவருக்கும் கடவுள் ஒவ்வொரு தனித்துவமான திற்மைகளை (தாலந்துகளை) அவர் தந்திருக்கிறார். நாம் அவற்றை கடவுளுக்கென்று பயன்படுத்துலோம். நாம் மற்றவர்களைக் கண்டு கவலைப்பட வேண்டாம். நம்மை நேர்த்தியாக வடிவமைத்துள்ள கர்த்தரையே நோக்கிப் பார்ப்போம். பவுல் கூறுவது, எனக்கு உரிய ஒட்டத்தை ஒடி முடிப்பேன் (2 திமோ 4:7) என்பதே.

நாமும் கடவுள் நமக்கு வைத்திருக்கிற நமக்கான வாழ்வின் திட்டத்தை அறிந்து, உணர்ந்து, தொடர்ந்து, செய்து முடிப்போம். ஆண்டவரின் திருக்கரங்களில் நம்மை அர்ப்பணிப்போம், நன்றி.

"அவர் நமக்காக வைத்திருக்கிற திட்டம் நன்மைக்கே"

எரேமியா 29:11

Article by,
Mrs.Jenifer Paul,
Youth fellowship.



PSALMS 46-60
சங்கீதம் 46-60

1. எது உருகிப் போயிற்று?
2. பூமியின் கேடகங்கள் யாருடையவை?
3. கர்த்தர் கீழ்க்காற்றினால் எதை உடைக்கிறார்?
4. அழிந்து போகும் மிருகங்களுக்கு ஒப்பானவன் யார்?
5. தேவனை மகிமைப்படுத்துபவன் யார் ?
6. தேவனுக்கேக்கும் பலிகள் எவை?
7. ஆலயத்தில் எந்த மரத்தைப் போல் இருக்கிறேன்?
8. இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு எங்கிருந்து வருகிறது?
9. எது நலமானது?
10. அவர் வார்த்தைகள் எதிலும் மிருதுவானவைகள்?
11. துருத்தியில் வைக்க வேண்டுவது எது?
12. விழியுங்கள் என்று கூறும் இசைக்கருவிகள் எவை?
13. கரைந்து போகிற இதைப்போல ஒழிந்து போவார்கள் என்ன அது?
14. ஊளையிடுவது எது?
15. தலையின் பெலன் யார்?

ஆகஸ்ட்-2026 மாத வினாவிற்கான விடைகள்

1. சங் 31:21
2. சங் 32:10
3. சங் 33:12
4. சங் 34:22
5. சங் 35:13
6. சங் 36:5
7. சங் 37:30
8. சங் 38:12
9. சங் 39:8
10. சங் 40:9
11. சங் 41:9
12. சங 42:8
13. சங் 43:4
14. சங் 44:16
15. சங் 45:13

ஆகஸ்ட்-2026 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. பிப்ளின் நெல்சன்,

செல்வி. அஜின்ஷா,

திருமதி. ஜெயின் ராஜவேல்,

திருமதி. ராதிகா செல்வக்குமார்,

திருமதி. ஜெனிபர் பால்,

திருமதி. ரோஸ்மேரி.

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

AUGUST-2026 - WINNERS

KIDS COLOURING: INIYAL EVANGELINE

WORD SEARCH: INIYAN IMMANUEL

CROSS WORD: SHERINSHA,

INIYAN IMMANUEL

FIND THE WAY: INIYAN IMMANUEL

Name: _____ Date: _____

Kids Coloring



PRAYER WORD SEARCH




BLESSING
COMMUNION
DEVOTION
FAITH
GRATITUDE
GUIDANCE
HEALING
HOPE
HUMILITY
INTERCESSION
MEDITATION
PETITION
PRAISE
PRAYER
REPENTANCE
REVELATION
SILENCE
SPIRIT
SUPPLICATION
THANKSGIVING
WORSHIP

Name : .....


"I AM"
THE WAY, TRUTH, & THE LIFE

Guide the angels to heaven.



CROSS WORD

Name : .....



Across

1 Remorse (10)
6 Consecrate (6)
7 Break a Commandment (5)
9 Make a hole (6)
10 Pot (3)
11 What Ai became (4)
14 This initially watered the earth (4)
15 Samuel's mentor (3)
16 Small river (6)
17 Mount that Moses climbed (5)
18 Prophet in David's time (6)
20 Biblical garden (10)

Down

1 Take flight (3)
2 One of the twelve (6)
3 All living things (6)
4 Response (6)
5 Guardians of Eden (8)
6 The father of Levi (8)
8 Grow (8)
9 Forbearance (8)
12 Second longest book (6)
13 Statue metal (6)
14 Sister of Lazarus and Mary (6)
19 Wood splitter (3)

SEPTEMBER - 2026

CSI TAMIL PARISH, AL AIN

Birthdays

A REASON TO GIVE THANKS

01-SEPTEMBER	Master. Allen Riyo
02-SEPTEMBER	Mrs. Shafeena
03-SEPTEMBER	Mr. David Thomas Packiraj
04-SEPTEMBER	Mr. Celin Jose
04-SEPTEMBER	Mrs. Jamuna Rani
05-SEPTEMBER	Mrs. J.N. Basil Shallu
05-SEPTEMBER	Mrs. K.V. Ashmitha Lifin Raj
08-SEPTEMBER	Dr. Divya Dharshini
09-SEPTEMBER	Mr. J. Vinith Samuel
09-SEPTEMBER	Ms. J.B. Ferrozlin Jesi
09-SEPTEMBER	Ms. Pauline
10-SEPTEMBER	Mrs. R. Muneeswari
10-SEPTEMBER	Mrs. Shiby Angel
10-SEPTEMBER	Mr. M. Asphin Raj
10-SEPTEMBER	Rev. S. Baktha Thiyagarajan
11-SEPTEMBER	Ms. Jemima Ashni
11-SEPTEMBER	Master. Samuel Hebron Stephen
11-SEPTEMBER	Mr. Gnana Vajith
12-SEPTEMBER	Mrs. J.P. Pamela Jennifer

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

Jeremiah 29:11

Fearfully and Wonderfully Made

PSALM 139:14

SEPTEMBER - 2026

CSI TAMIL PARISH, AL AIN

(continued)


Birthdays

A REASON TO GIVE THANKS

13-SEPTEMBER	Mr. I. Berlin Jose
13-SEPTEMBER	Mr. Joel Singh Edison
17-SEPTEMBER	Mr. Nelson Sopitha Raj
18-SEPTEMBER	Mrs. P. Hemalatha
19-SEPTEMBER	Mr. K.S. Suji Kumar
19-SEPTEMBER	Ms. Leni
21-SEPTEMBER	Mr. S. Jesvin Bose
21-SEPTEMBER	Mrs. Segena Livingston
22-SEPTEMBER	Ms. Janet Thirza
23-SEPTEMBER	Mr. Sharon S. Rao
23-SEPTEMBER	Ms. Shivi Mol Shalinal
24-SEPTEMBER	Mr. Danesh Yogendra Rao
26-SEPTEMBER	Ms. J. Jofina
27-SEPTEMBER	Ms. Pragathi
27-SEPTEMBER	Master. Ethan Anish
28-SEPTEMBER	Mrs. S. Divya Sherrin
28-SEPTEMBER	Mrs. Annie Pamila
29-SEPTEMBER	Mrs. Sugitha Isravel
30-SEPTEMBER	Master. Immanual

"Every good gift is from above, coming down from the Father of the heavenly lights, who does not change like shifting shadows."

James 1:17



SEPTEMBER *Wedding* ANNIVERSARY

02-SEP Mr. D. Jeyakumar & Mrs. J. Vivilin Juni

03-SEP Mr. P. Chandrasekar & Mrs. Harika Chandrasekar

05-SEP Mr.. Praveen Paul & Mrs. Sugitha Isravel

07-SEP Mr. Suresh Rajan & Mrs. Anitha Rajan

09-SEP Mr. Danesh Yogendra Rao & Mrs. Annie Selvi Dan

11-SEP Mr. J. Vinith Samuel & Mrs. M.. Aishwariya

12-SEP Mr. David Thomas Packiraj & Mrs. Marylene Hana

15-SEP Mr. Prince Emmanuvel & Mrs. Josephine Nimshi

16-SEP Mr. D. Rajavel & Mrs. Jein Arputhakani Rajavel

16-SEP Rev. S. Baktha Thiyagarajan & Mrs. Velanganni

16-SEP Mr. A. Stalin Jose & Mrs. J. Babi Kutti

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14

CSI TAMIL PARISH
ALAIN

TOGETHER IN CHRIST
FOR A GREATER TOMORROW

"Give thanks to the Lord,
for He is good;
His steadfast love endures forever."
Psalm 136:1

PRAY & Prepared

Freely you have received;
Freely give.

Matthew 10:8

HARVEST FESTIVAL

GIVING | SHARING | BLESSING | TOGETHER

A Harvest for His Kingdom

DATE
24th Oct, 2026
Saturday

PLACE
Grand Stand,
Equestrian Club,
Alain.

PEOPLE
PURPOSE
GENEROSITY
ETERNAL IMPACT

" The harvest is plentiful,
but the labourers are few."
Matthew 9:37

EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY